ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

## நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி

# 7.10 – இன்பம் பயக்க

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness  śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 7.10 – இன்பம் பயக்க

‡ இன்பம் பயக்க எழில் மலர் மாதரும் தானும் ⋆
இவ்வேழ் உலகை ⋆
இன்பம் பயக்க இனிதுடன் வீற்றிருந்து ⋆
ஆள்கின்ற எங்கள் பிரான் ⋆
அன்புற்றமர்ந்துறைகின்ற ⋆
அணி பொழில் சூழ் திருவாறன் விளை ⋆
அன்புற்றமர்ந்து வலம் செய்து ⋆
கை தொழும் நாள்களும் ஆகும் கொலோ ‖ **7.10.1** ‖

ஆகும் கொல் ஐயம் ஒன்றின்றி ⋆
அகல் இடம் முற்றவும் ⋆
ஈர் அடியே ஆகும் பரிசு நிமிர்ந்த ⋆
திருக்குறள் அப்பன் அமர்ந்துறையும் ⋆
மாகம் திகழ் கொடி மாடங்கள் நீடு ⋆
மதிள் திருவாறன் விளை ⋆
மா கந்த நீர் கொண்டு தூவி வலம் செய்து ⋆
கை தொழக் கூடும் கொலோ ‖ **7.10.2** ‖

கூடும் கொல் வைகலும் ⋆
கோவிந்தனை மதுசூதனைக் கோள் அரியை ⋆
ஆடும் பறவை மிசைக் கண்டு ⋆
கை தொழுதன்றி அவன் உறையும் ⋆
பாடும் பெரும் புகழ் நான்மறை வேள்வி ஐந்து ⋆

ஆறங்கம் பன்னினர் வாழ் ⋆
நீடு பொழில் திருவாறன் விளை தொழ ⋆
வாய்க்கும் கொல் நிச்சலுமே ‖ **7.10.3** ‖

வாய்க்கும் கொல் நிச்சலும் ⋆
எப்பொழுதும் மனத்தீங்கு நினைக்கப் பெற ⋆
வாய்க்கும் கரும்பும் பெரும் செந்நெலும் ⋆
வயல் சூழ் திருவாறன் விளை ⋆
வாய்க்கும் பெரும் புகழ் மூ உலகீசன் ⋆
வட மதுரைப் பிறந்த ⋆
வாய்க்கும் மணி நிறக் கண்ண பிரான் தன் ⋆
மலர் அடிப் போதுகளே ‖ **7.10.4** ‖

மலர் அடிப் போதுகள் என் நெஞ்சத்து ⋆
எப்பொழுதும் இருத்தி வணங்க ⋆
பலர் அடியார் முன்பருளிய ⋆
பாம்பணை அப்பன் அமர்ந்துறையும் ⋆
மலரின் மணி நெடு மாடங்கள் நீடு ⋆
மதிள் திருவாறன் விளை ⋆
உலக மலி புகழ் பாட ⋆
நம் மேல் வினை ஒன்றும் நில்லா கெடுமே ‖ **7.10.5** ‖

ஒன்று நில்லா கெடும் முற்றவும் தீ வினை ⋆
உள்ளித் தொழுமின் தொண்டீர் ⋆
அன்றங்கமர் வென்றுருப்பிணி நங்கை ⋆
அணி நெடும் தோள் புணர்ந்தான் ⋆
என்றும் எப்போதும் என் நெஞ்சம் துதிப்ப ⋆
உள்ளே இருக்கின்ற பிரான் ⋆

நின்ற அணி திருவாறன் விளை என்னும் ⋆
நீள் நகரம் அதுவே ॥ **7.10.6** ॥

நீணகரம் அதுவே மலர்ச் சோலைகள் சூழ் ⋆
திருவாறன் விளை ⋆
நீணகரத்துறைகின்ற பிரான் ⋆
நெடுமால் கண்ணன் விண்ணவர் கோன் ⋆
வாண புரம் புக்கு முக்கட் பிரானைத் ⋆
தொலைய வெம் போர்கள் செய்து ⋆
வாணனை ஆயிரம் தோள் துணித்தான் ⋆
சரண் அன்றி மற்றொன்றிலமே ॥ **7.10.7** ॥

அன்றி மற்றொன்றிலம் நின் சரணே என்று ⋆
அகல் இரும் பொய்கையின் வாய் ⋆
நின்று தன்நீள் கழல் ஏத்திய ⋆
ஆனையின் நெஞ்சிடர் தீர்த்த பிரான் ⋆
சென்றங்கினிதுறைகின்ற ⋆
செழும் பொழில் சூழ் திருவாறன் விளை ⋆
ஒன்றி வலம் செய்ய ஒன்றுமோ ⋆
தீ வினை உள்ளத்தின் சார்வல்லவே ॥ **7.10.8** ॥

தீ வினை உள்ளத்தின் சார்வல்ல ஆகித் ⋆
தெளி விசும்பேறல் உற்றால் ⋆
நாவின் உள்ளும் உள்ளத் துள்ளும் ⋆
அமைந்த தொழிலின் உள்ளும் நவின்று ⋆
யாவரும் வந்து வணங்கும் பொழில் ⋆
திருவாறன் விளை அதனை ⋆

மேவி வலம் செய்து கை தொழக் கூடும் கொல் ⋆
என்னும் என் சிந்தனையே ‖ **7.10.9** ‖

சிந்தை மற்றொன்றின் திறத்ததல்லாத் தன்மை ⋆
தேவ பிரான் அறியும் ⋆
சிந்தையினால் செய்வ தான் அறியாதன ⋆
மாயங்கள் ஒன்றும் இல்லை ⋆
சிந்தையினால் சொல்லினால் செய்கையால் ⋆
நிலத் தேவர் குழு வணங்கும் ⋆
சிந்தை மகிழ் திருவாறன் விளை உறை ⋆
தீர்த்தனுக்கற்ற பின்னே ‖ **7.10.10** ‖

‡ தீர்த்தனுக்கற்ற பின் ⋆
மற்றோர் சரண் இல்லை என்றெண்ணி ⋆
தீர்த்தனுக்கே தீர்த்த மனத்தனன் ஆகிச் ⋆
செழுங்குருகூர்ச் சடகோபன் சொன்ன ⋆
தீர்த்தங்கள் ஆயிரத்துள் ⋆
இவை பத்தும் வல்லார்களை ⋆
தேவர் வைகல் தீர்த்தங்களே என்று பூசித்து நல்கி உரைப்பர் ⋆
தம் தேவியர்க்கே ‖ **7.10.11** ‖

அடிவரவு — இன்பம் ஆகுங்கொல் கூடுங்கொல் வாய்க்குங்கொல் மலரடி ஒன்று நீணகரம் அன்றி தீவினை சிந்தை தீர்த்தன் தேவிமார்

இன்பம் பயக்க முற்றிற்று

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்